புதுச்சேரி அரசு

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

காரைக்கால்

செய்தி குறிப்பு 06.06.2020

புதுச்சேரி அரசு வரும் 08.06.2020 அன்று முதல் மாநிலம் முழுவதும் அனைத்து வழிப்பாட்டு ஸ்தலங்களையும் திறப்பதற்கு அனுமதியும் அதற்குண்டான நெறிமுறைகளையும் வெளியுட்டுள்ளது. வைரஸ் பரவாமல் இருக்க கீழ் வரும் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்

வழிபாட்டு ஸ்தலங்களில் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள்:

1. அனைத்து ஸ்தலங்களில் நுழைவுவாயிலில் கை சுத்தகரிப்பு கிருமிநாசினி மற்றும் உடல் வெப்ப அளவீடு கருவி வைதிருக்க வேண்டும்
2. பக்தர்கள் அனைவரும் முககவசம் அணிந்திருக்க வேண்டும்.
3. மக்கள் வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்பு கைகளையும் காலையும் சோப்பு மற்றும் தண்ணிரில் கழுவ வேண்டும்
4. கொரோனா அறிகுறியில்லாத நபர்கள் மட்டுமே வளாகத்தில் அனுமதிக்கப்படுவார்கள்
5. வழிபாட்டு ஸ்தலங்களில் தூர இடைவெளி கடைபிடிக்கப்பட்டு அனுமதிக்க படும் எண்ணிக்கையில் மட்டுமே பக்தர்கள் உள்ளே அனுமதிக்கபடவேண்டும். எக்காரணம் கொண்டும் அதிக அளவில் உள்ளே பக்தர்களை உள்ளே அனுமதிக்க கூடாது. இதற்கு நிர்வாகமே பொறுபேற்றுக்கொள்ளவேண்டும்
6. பக்தர்கள் அனைவரும் குறைந்த பட்சம் 6 அடி வரை சமுதாய இடைவெளியை பின்பற்ற வேண்டும்.
7. வழிபாட்டு ஸ்தலங்களில் உள்புற ம் மற்றும் வெளிபுறம் உள்ள கடைகளிலும் சமுதாய இடைவெளியை பின்பற்ற வேண்டும்
8. வைரஸைப் பற்றிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்த சுவரொட்டிகள் மற்றும் பரப்புவதற்கான ஆடியோ மற்றும் விடியோ கிளிப்புகள் தொடர்ந்து இயக்கப்பட வேண்டும்.
9. தீர்த்தம் விடுதல் மற்றும் தெளிதல் தவிர்க்கப்படவேண்டும்
10. குழந்தைகள் வயதானவர்கள், உடல் நலமில்லாதவர்கள் வழிபாட்டுத் தலங்களுக்கு வருவதை தவிர்க்கவும்

Scanned with CamScanner

11. பக்தர்களுக்கு தனி நுழைவு மற்றும் வெளியேறுதல் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

12. காலணிகள் சொந்த வாகனத்திற்குள் வைத்திருக்க வேண்டும். தேவைப்பட்டால் அவை ஒவ்வொரு தனிநபருக்கோ அல்லது குடும்பத்துக்கோ தனி நபர்களால் தனி இடங்களில் வைக்கப்பட வேண்டும்

13. வரிசையில் நிர்பவர்களுக்கு எதுவாக வளாகத்தில் சமூக தூரத்தை உறுதி செய்வதற்கும் குறிப்பிட்ட தூரங்களுக்கு அடையாளம் குறித்திருக்க வேண்டும்.

14. சிலைகள் மற்றும் புனித நூல்கள் ஆகியவற்றை தொடுவதற்கு அனுமதி இல்லை. ஒருவருக்கொருவர் வாழ்த்தும்போது உடல் ரீதியான தொடர்பைத் தவிர்க்கவும்.

15. மத இடங்களில் அன்னதான உணவைத் தயாரித்து விநியோகிக்கும்போது உடல் ரீதியான தூர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்

16. பெரிய அளவில் கூட்டம் கூடுவதோ , சபை கூடுவதோ தொடர்ந்து தடைசெய்யப்பட்டுள்ளது

17. பதிவுசெய்யப்பட்ட பக்தி பாடல்கள் இசைக்கப்படலாம். பாடகர் அல்லது பாடல் குழுக்கள் அனுமதிக்கப்படக்கூடாது.

18. ஏர் கண்டிஷனிங் சாதனம் அல்லது காற்றோட்ட அறை , CPWD வழிகாட்டுதல்களை பின்பற்றப்பட வேண்டும், இது அனைத்து ஏர் கண்டிஷனிங் சாதனங்களின் வெப்பநிலை அமைப்பு 24- 30°C வரம்பில் இருக்க வேண்டும்,. ஈரப்பதம் 40-70% வரம்பில் இருக்க வேண்டும்.

19. பொதுவான பிரார்த்தனை பாய்களைத் தவிர்க்க வேண்டும். பக்தர்கள் தங்களது சொந்தமாக தனி பிரார்த்தனை பாய் கொண்டு வர வேண்டும்

20. பிரசாதம் , புனித நீரை விநியோகித்தல் அல்லது தெளித்தல் போன்ற எந்தவொரு நிகழ்விற்கும் மத இடத்திற்குள் அனுமதி இல்லை

21. வழிபாடுதளங்களில் உள்ள தரைகளை தொடர்ந்து கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்ய வேண்டும்

Scanned with CamScanner

௨௨. வைரஸ் அறிகுறி உள்ளவர்களை தனி அறையில் வைத்திருக்க அதற்குந்தான வசதி ஏற்பாடுகள் இருக்க வேண்டும். மருத்துவர்களால் தொற்று உறுதி செய்யும் வரை அறிகுறி உள்ளவர்களுக்கு முககவசம் வழங்க வேண்டும் .

௨௩. வைரஸ் அறிகுறி இருக்கும் பட்சத்தில் உடனே அருகில் உள்ள மருத்துமனை அல்லது மாவட்ட/ மாநில உதவி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவேண்டும்.

௨௪. வைரஸ் உறுதி செய்யப்பட்டால் ஸ்தலங்கள் முழுவதும் கிருமிநாசினியால் சுத்தம் செய்யவேண்டும்.

மாவட்ட ஆட்சியர்
காரைக்கால்

பெறுநர்:

1. நிலைய இயக்குனர் , அகில இந்திய வானொலி நிலையம், காரைக்கால்.
2. உதவி இயக்குனர், செய்தி மற்றும் விளம்பரத்துறை காரைக்கால்
3. மேலாளர், டைமண்ட் தொலைக்காட்சி, காரைக்கால்.
4. ஆசிரியர், அனைத்து தினசரி, காரைக்கால்
5. அனைத்து ஆலயங்கள் / தேவாலயங்கள் மற்றும் மசூதிகளின் நிர்வாகிகள்.